## 114. விண்ணப்பத்தின் ஆவி

பல்லவி

விண்ணப்பத்தின் ஆவி வேண்டுமே
மன்றாட்டின் ஆவி வேண்டுமே
பாவத்தில் அழியும் ஜனங்களுக்காய்
அழுது புலம்பிட வேண்டுமே

அனுபல்லவி

யாரை நான் அனுப்பிடுவேன்
யார் என் காரியமாய்
போவானே போவானே
என்கிற சத்தம் கேட்கிறதே

சரணங்கள்

1. ஆத்துமாவின் அழிவுக்காக
கண்ணீர் விட்டு அழுவோரை
நெற்றியிலே தன் முத்திரையை
போடு என்றாரே
- யாரை நான்

2. பாரினில் பார் நண்பா
பாவத்தை தண்ணீரை போல்
குடிக்கும் ஜனங்கள் எத்தனை
கோட கோடியே
- யாரை நான்

3. சுயநலம் வேண்டாம் நண்பா
பொதுநலம் உனக்கு வேண்டுமே
கிறிஸ்து இயேசு ஜீவனை
உனக்காய் தந்தாரே
- யாரை நான்

4. குறுகிய நினைவில் இருப்பவரே
உன் இருதயம் அகலமாகட்டும்
உன்னை போல பிறனை நேசி
திறப்பில் நின்றிடு
- விண்ணப்பத்தின்